## அரசு — மாநகராட்சி பள்ளி

# மாணவ-மாணவியர்கள் 3,178 பேர் மெட்ரோ ரெயில் பயணம்!

சென்னை, மே. 3– கடந்த கல்வி ஆண்டில் அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளைச்சேர்ந்த31,178 மாணவ–மாணவியர்கள் மெட்ரோரெயிலில்கல்விப் பயணம் செய்துள்ளனர்.

சென்னை மெட்ரோ ரெயில்நிறுவனம்மெட்ரோ ரெயிலைப்பற்றியும்அதில் உள்ள வசதிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்தும்அரசுமற்றும்மாநகராட்சிப் பள்ளிகளின் மாணவ–மாணவியர்களுக்குவிழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சியில் சென்ட்ரல் மெட்ரோவில் இருந்து விமானநிலையம், ஏ.ஜி.டி.எம்.எஸில் இருந்து விமான நிலையம் மற்றும் வண்ணாரப்பேட்டையில் இருந்து விமான நிலையம் வரை மெட்ரோ ரெயிலில் கல்விப் பயணம் ஏற்பாடு செய்து அழைத்து செல்லப்படுகின்றனர்.

கல்விப் பயணங்கள் மாதம்தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னைமாவட்டத்தில் அரசு மற்றம் மாநகராட்சிப் பள்ளிகள் மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளூர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ–மாணவியர்களுக்கு 2018–19ம் கல்வியாண்டில் கல்விப் பயணங்கள் அழைத்து செல்லப்பட்டது. மெட்ரோ ரெயிலின் சிறப்பு அம்சங்களை பற்றி மாணவர்களுக்கு விளக்கப்பட்டன.

கடந்த கல்வி ஆண்டில் 60 பள்ளிகளில் இருந்து மொத்தம் 31,178 மாணவ–மாணவியர்கள் மெட்ரோ ரெயிலில் பயணித்து பயன் பெற்றனர்.

வரும் (2019–20) கல்வியாண்டிலும் அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளி மாணவ மாணவியர்களை மெட்ரோரெயிலில்கல்விப் பயணம் அழைத்து செல்ல ஏற்பாடுகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



அரசு பள்ளி மாணவ– மாணவியர் மெட்ரோ ரெயிலில் பயணித்த போது எடுத்தபடம்.